# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 160/மா/2025
நாள் 12.02.2026

M.R. ராஜா
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர், மண்டலம் –1 (கிழக்கு)
மதுரை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

மதுரை–14, கிருஷ்ணாபுரம் காலனி 1வது தெரு, கதவு எண் 7 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. R. ராஜா என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.04.2025 அன்று பெறப்பட்டு, 160/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–14, கிருஷ்ணாபுரம் காலனி 1வது தெரு, கதவு எண் 7 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. R. ராஜா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள நாளிடப்படாத தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாநகராட்சி மண்டலம் 1, வார்டு 16, கதவு எண்.54–A/1, வரி விதிப்பு, என் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி கட்டிடம் கதவு எண் 54–A/1, என்றும், கதவு எண்.54–B என்றும் 2 வரி விதிப்புகளாக நொறுங்களுடன் கூடிய கட்டிடமாக இருந்து வந்தது. இந்த நிலையில், 2019–2020–2வது அரையாண்டு முடிய கட்டிடங்களுக்குண்டான வரிகள் முழுவதும் செலுத்தும் நிலையில், ஏப்ரல் 2020ம் ஆண்டு முதல் குடியிருப்பு உபயோகமாக மாற்றுவதாக மண்டலம் 1, உதவி ஆணையாளர் அவர்களின் கடிதம் எண்.ம1எ3/5845/2019, நாள் 09.09.2019ம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 01.04.2020–லிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்யப்படாததால் வரி செலுத்த இயலவில்லை. இந்த நிலையில், கதவு எண்.54–B கட்டிடத்திற்கு புதிதாக பாதாள சாக்கடை இணைப்பும், குடிநீர் இணைப்பும் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மேற்படி கட்டிடங்கள் இடித்து புதிதாக கட்டிடம் கட்டிய நிலையில், 01.10.2022 முதல் அரைவருட வரியாக ரூ.4362/– என வரி விதிக்கப்பட்டு தற்காலிக கேட்பு அறிவிப்பு / கணக்கீட்டுப்படிவம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், கதவு எண்.54–B குடியிருப்பாக மாற்றம் செய்த பின்னும், கணினியில் திருத்தம் செய்யப்படவில்லை. கணினியில் திருத்தம் செய்து கொடுக்கும்படி பலமுறை கேட்டுக் கொண்டும், இன்று வரை குடியிருப்பு உபயோகமாக திருத்தம் செய்யப்படவில்லை. கதவு எண் 54–A/1 மற்றும் 54-B ஆகிய 2 வரிவிதிப்புகளையும் ஒன்றாக இணைத்து 54–A/1 என்று 01.04.2022 முதல் வரிவிதிப்பு செய்த பின் 54-B பகுதியில் வழங்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு கதவு எண் 54–A/1 என மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க கோரி மண்டலம் எண் 1, உதவி ஆணையாளர் அவர்களிடம் பலமுறை கோரியும், இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, குடிநீர் குழாய் இணைப்பு, பாதாள இணைப்பு ஆகிய இரண்டையும்

கதவு எண்.54-Bக்குண்டான வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டு விட்டதால், கதவு எண்.54–A/1என மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க பணிவுடன் பிராத்திக்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. இந்நிலையில், மனுதாரர் தனது 17.06.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு 16, திருவள்ளுவர் காலனி, கதவு எண் 54-A/1, வரி விதிப்பு எண்.115/016/903669 வரி விதிப்பு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்தேன். என்முறையீட்டு மனு 15.05.2025ம் தேதியன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 160/மா/2025 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், மண்டலம் 1, உதவி ஆணையாளர் அவர்கள் வரித்தண்டலருடன் இடத்தை நேரில் பார்வையிட்டு வரியை சரி செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்தி கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. மதுரை மாநகராட்சி மண்டலம் எண்–1 (கிழக்கு) உதவி ஆணையாளர் (பொ) தனது 22.08.2025 மற்றும் 01.12.2025 நாளிட்ட கடிதங்களில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"திரு. M. R. ராஜா என்பவரது மனுவில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 16, கதவு எண் 54–A/1 திருவள்ளுவர் காலனி என்ற முகவரியில் கட்டப்பட்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் ஏற்கனவே வணிகம் மற்றும் குடியிருப்பு என இரண்டு வரிவிதிப்பு எண்கள் இருந்து வந்ததும் அதில் வணிக வரிவிதிப்பு எண்ணில் குழாய் மற்றும் பாதாள சாக்கடைக்குரிய இணைப்புகள் பதிவு செய்யப்பட்டு இருந்ததும் நேராய்வில் கண்டறியப்பட்டது.

மேற்படி இடத்தில் இருந்த பழைய கட்டிடம் முற்றிலும் இடிக்கப்பட்டு புதிதாக குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு மனுதாரரால் மனு அளிக்கப்பட்டதில், கதவு எண் 54–A/1க்கு கட்டப்பட்ட குடியிருப்பு வரி விதிப்பு எண் 115/016/903669ல் புதிய கட்டிடத்தின் அளவுகளை பதிவு செய்து வணிக வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டு இருந்தது.

தற்போது வணிக வரிவிதிப்பு எண்ணில் உள்ள குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புகளை குடியிருப்பு வரிவிதிப்பு எண்ணில் இணைக்க கோரி மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டது. ஒரு வரிவிதிப்பு எண்ணில் உள்ள குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புகளை நேரடியாக வேறொரு வரிவிதிப்பு எண்ணில் பதிவு செய்ய வழிவகை இல்லாத காரணத்தால் மனுதாரரின் குடியிருப்பு வரிவிதிப்பு எண் 115/016/903669ல் உள்ள கட்டிட அளவுகளை வணிக வரிவிதிப்பு எண் 115/016/904260ல் குடியிருப்பு உபயோக அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு மேற்படி வரிவிதிப்பு எண் 115/016/903669ல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புத் தொகைகளை வணிக அடிப்படையில் இருந்து குடியிருப்பு அடிப்படையிலும் மற்றும் கதவு எண் 54–A/1 என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் அன்றைய தேதிய விசாரணையில் ஆஜராகவில்லை. ஆனால், 02.12.2025 நாளிட்ட தனது மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"I would like to inform you that the enquiry related to my petition (Petition No.160/MA/2025) has been completed.. I met the concerned officer, and my

query has been fully resolved. I have also received my petition back after the completion of the process.

Thank you for your support and timely assistance. Kindly let me know if any further steps are required from my side." எனத் தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் சார்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு)–ன் உதவி வருவாய் அலுவலர் 05.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செள்துள்ளார்:–

"திரு.M. R. ராஜா என்பவரது மனுவில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 16, கதவு எண் 54–A/1 திருவள்ளுவர் காலனி என்ற முகவரியில் கட்டப்பட்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் ஏற்கனவே வணிகம் மற்றும் குடியிருப்பு என இரண்டு வரிவிதிப்பு எண்கள் இருந்து வந்ததும் அதில் வணிக வரிவிதிப்பு எண்ணில் குழாய் மற்றும் பாதாள சாக்கடைக்குரிய இணைப்புகள் பதிவு செய்யப்பட்டு இருந்ததும் நேராய்வில் கண்டறியப்பட்டது.

மேற்படி இடத்தில் இருந்த பழைய கட்டிடம் முற்றிலும் இடிக்கப்பட்டு புதிதாக குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு மனுதாரரால் மனு அளிக்கப்பட்டதில், கதவு எண் 54–A/1க்கு கட்டப்பட்ட குடியிருப்பு வரி விதிப்பு எண் 115/016/903669ல் புதிய கட்டிடத்தின் அளவுகளை பதிவு செய்து வணிக வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது.

தற்போது வணிக வரிவிதிப்பு எண்ணில் உள்ள குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புகளை குடியிருப்பு வரிவிதிப்பு எண்ணில் இணைக்க கோரி மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டது. ஒரு வரிவிதிப்பு எண்ணில் உள்ள குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புகளை வேறொரு வரிவிதிப்பு எண்ணில் பதிவு செய்ய வழிவகை இல்லாத காரணத்தால் மனுதாரரின் குடியிருப்பு வரிவிதிப்பு எண் 115/016/903669ல் உள்ள கட்டிட அளவுகள் வணிக வரிவிதிப்பு எண் 115/016/904260ல் குடியிருப்பு உபயோக அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு மேற்படி வரிவிதிப்பு எண் 115/016/903669ல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புத் தொகைகளை வணிக அடிப்படையில் இருந்து குடியிருப்பு அடிப்படையிலும் மற்றும் கதவு எண்.54 A/1 என மாற்றம் செய்யப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற விபரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனு, கடிதம், மின்னஞ்சல் மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் எண்–1 (கிழக்கு) உதவி ஆணையாளரின் (பொ) அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு 16, திருவள்ளுவர் காலனி, கதவு எண் 54–A/1 மற்றும் 54-B ஆகிய 2 வரிவிதிப்புகள் உள்ள கட்டிடம் இருந்தது என்பதும், கதவு எண்.54-B குடியிருப்பாக மாற்றம் செய்ததினால் குடிநீர் குழாய் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு ஆகிய இரண்டையும், கதவு எண் கதவு எண்.54-Bக்குண்டான வரிவிதிப்பு ரத்து செய்யப்பட்டு விட்டதால், கதவு எண் 54–A/1 என மாற்றம் செய்யக் கோரியிருப்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 1–ன் அலுவலகத்தால் தன் கோரிக்கை முழுவதுமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதும் மனுதாரரின் மனு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிய முடிகிறது.

வார்டு எண் 16, கதவு எண் 54–A/1 திருவள்ளுவர் காலனி என்ற முகவரியில் கட்டப்பட்ட கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டதில், ஏற்கனவே வணிகம் மற்றும் குடியிருப்பு என இரண்டு வரிவிதிப்பு எண்கள் இருந்து வந்ததும், மேற்படி இடத்தில் இருந்த பழைய கட்டிடம் முற்றிலும்

இடிக்கப்பட்டு புதிதாக குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு மனுதாரரால் மனு அளிக்கப்பட்டதில், மனுதாரரின் குடியிருப்பு வரிவிதிப்பு எண் 115/016/903669ல் உள்ள கட்டிட அளவுகளை வணிக வரிவிதிப்பு எண் 115/016/904260ல் குடியிருப்பு உபயோக அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு, மேற்படி குடியிருப்பு வரிவிதிப்பு எண் 115/016/903669 நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும் குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்புத் தொகைகளை வணிக அடிப்படையில் இருந்து குடியிருப்பு அடிப்படையிலும் மற்றும் கதவு எண் 54–A/1 என மாற்றம் செய்யப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) உதவி ஆணையாளரின் அறிக்கைகள் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கோரியவாறு மனுதாரரின் குடியிருப்பு வரிவிதிப்பு எண் 115/016/903669–ல் உள்ள கட்டிட அளவுகள் வணிக வரி விதிப்பு எண் 115/016/904260–ல் குடியிருப்பு உபயோக அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு, மேற்படி வரிவிதிப்பு எண் 115/016/903669–நீக்கம் செய்யப்பட்டு, குழாய் மற்றும் பாதாள சாக்கடை கேட்பு தொகைகளை வணிக அடிப்படையிலிருந்து குடியிருப்பு அடிப்படையிலும் மற்றும் கதவு எண் 54–A/1 என மாற்றம் செய்யப்பட்டுள்ளதும், இதனை மனுதாரர் தனது 02.12.2025 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் உறுதி செய்து இருப்பதும் அறிய முடிவதால், மனுதாரரின் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M.R. ராஜா,
கதவு எண் 7, கிருஷ்ணாபுரம் காலனி 1வது தெரு,
மதுரை–625 014.
2) ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 1 (கிழக்கு),மதுரை மாநகராட்சி, சர்வேயர் காலனி,
அழகர் கோவில் மெயின் ரோடு,மதுரை–625 007.
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.
5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பாளர் ( Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ. கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/2/26
செயலாளர்

17/2/26